DATE:– 10.06.2026

S.C. NO.217/2022

PW17 – செந்தில்குமரன்

Accused present.

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்).

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதியுடன் குறுக்கு விசாரணை எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவ தினத்தன்று நான் முழுவதுமாக காவல் நிலையத்தில் தான் பணியில் இருந்தேன். அன்றைய தினம் என்னுடன் எந்தெந்த காவலர்கள் இரவு பணியில் இருந்தார்கள் என்று தற்போது என்னால் ஆவணங்களை பார்க்காமல் சொல்ல இயலாது. அன்றைய தினம் இரவு பணி முடிந்து எத்தனை மணிக்கு நான் மறுநாள் பணி முடிந்து செல்வேன் என்றால் எனது பணி முடிந்த பிறகு தான் என்னால் செல்ல முடியும் நேரம் குறிப்பிட்டு சொல்ல முடியாது. புகார் தாரருடன் வேறு யார் யார் புகார் கொடுக்க வந்திருந்தார்கள் என்று தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் வரும் வரை புகார் சித்தநாதன் காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் என்னுடன் அவர் இருந்தார். புகாரில் சாட்சி கையொப்பமிட்ட நபர் என் முன்னிலையில் தான் புகாரில் சாட்சி கையொப்பம் செய்தார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்ற விவரமும் அவருடன் யார் யார் வந்தார்கள் என்ற விவரமும் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் வரும் வரை நான் சம்பவத்திற்கு காவலர்கள் யாரேனும் அனுப்பி வைத்தேனா என்றால் அனுப்பி வைத்தேன். ஆனால் யாரை அனுப்பி வைத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகாரில் புகார் சித்தநாதன் எதிரியை எங்கு வைத்து பார்த்ததாக குறிப்பிட்டுச் சொல்லி உள்ளார். எதிரியை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்று தூரத்தை புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரி என்ன வகையான ஆடை அணிந்திருந்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் புகார்தாரர் எதிரி ரத்தத்துடன் அருவாளை எடுத்துச் சென்றதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரியின் மனைவி ஆறு வருடத்திற்கு முன்பு கிணற்றில் தவறி விழுந்து இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முதல் தகவல் அறிக்கையில் அந்த விபரம் 10 வருடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த முரணுக்கு காரணம் எழுத்துப்பிழை. ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு உடன் சென்ற பொழுது நான் அவருடன் உதவிக்கு சென்று இருந்தேன் எத்தனை மணிக்கு ஆய்வாளர் விசாரணை முடித்து காவல் நிலையம் திரும்பினார் என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. புகார்தாரர் புகார் கொடுப்பதற்கான காலதாமதம் குறித்து விளக்கம் எதுவும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் காவல் நிலையத்திற்கு எழுதி தான் புகார் எடுத்து வரப்பட்டது. சம்பவம் குறித்து கேள்விப்பட்டு நான் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு விட்டு அதன் பிறகு காவல் நிலையம் வந்து இந்த புகார் பின்னிட்டு பெறப்பட்டது என்றால் சரியல்ல. இது பொய்யாக தயாரிக்கப்பட்ட புகார் என்ற காரணத்தினால்தான் சாட்சி கையெழுத்து மேற்கண்ட சாட்சியிடம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.10 18:37:32 +0530

Principal Sessions Judge,
Salem.